## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 76/2025 |
| Deposition of Witness | : | PW– 5 |
| Name | : | விவேகானந்தன் |
| Father Name | : | ரவிக்குமார் |
| Village | : | துடியலூர் |
| Taluk | : | கோவை |
| Age | : | 49 |

Accused absent. 355 BNSS Petition filed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10.08.2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவை மண்டலம், துடியலூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வளராக உள்ளேன். இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் திரு.அர்ஜீனன் அவர்கள் தற்போது பணிமாறுதல் காரணமாக வேறு காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டதால் தற்போது ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 25.01.2025 ஆம் தேதியன்று காலை 7.00 மணிக்கு காங்கேயம் காவல் நிலைய முதல் நிலைக் காவலர் திரு.முருகேஷன் நிலைய அலுவலில் இருந்தபோது சக்திவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப காங்கேயம் காவல் நிலையக் குற்ற எண். 54/2025 – U/S: 281, 125(a) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பியும் அதன் நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு. அர்ஜீனன் அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் இவ்வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் திரு.அர்ஜீனன் அவர்கள் எடுத்துக்கொண்டு கடந்த 25.01.2025 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு திருப்பூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் கண்ணன் என்பவரின் இறப்பு இண்டிமேசன் பெற்று இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 281, 125(a) BNS –ல் இருந்து 281, 106(1) BNS ஆக சட்டப்பிரிவினை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். பின்னர் இவ்வழக்கு கோப்பினை தொடர் புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் விவேகானந்தன் ஆகிய எனது பார்வைக்கு வைத்தார். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்னர் இவ்வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் திரு.விவேகானந்தன் ஆகிய நான் எனது பார்வைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 25.01.2025 ஆம் தேதியன்று காலை 10.00 மணிக்கு சம்பவ இடத்தை ஆஜர் சாட்சிகள் சண்முகம் மற்றும் ராஜ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5. பின்னர் இவ்வழக்கு கோப்பினை தொடர் புலன் விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டு கடந்த 25.01.2024 ஆம் தேதி திருப்பூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று வழக்கில் இறந்துபோன கண்ணன் என்பவரது பிரேதத்தை பார்வையிட்டு ஆஜர் பஞ்சாயத்துகாரர்களுக்கும் சாட்சிகளுக்கும் முறைப்படி சம்மன் சார்வு செய்து சவக்கிடங்கிற்கு முன்பாக வைத்து மதியம் 13.00 மணியில் இருந்து மதியம் 15.00 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டேன். பின்னர் சாட்சிகள் பிரகாஷ், உமாமகேஷ்வரி, மணியன், தரணி, சக்திவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இறந்துபோன கண்ணன் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனைக்காக முதல் நிலைக்காவலர் முருகேஷன் என்பவர் மூலமாக மதியம் 15.10 மணிக்கு திருப்பூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர் அவர்களிடம் தக்க வேண்டுகோள் கடிதத்துடன்

ஆஜர்படுத்தியும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினேன். **(இறந்துபோன கண்ணன் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

6. பின்னர் கடந்த 28.01.2025 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரி பரமசிவம் என்பவரை கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தேன்.

7. இவ்வழக்கில் கடந்த 28.01.2025 ஆம் தேதியன்று விபத்தை ஏற்படுத்திய TN 38 BP 7539 என்ற பதிவு எண் கொண்ட Maruthi Zuzuki Swift காரின் விபத்திற்கான காரணம் அறியும்பொருட்டு காங்கயம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தினேன். மேலும், 18.02.2025 தேதியன்று விபத்தில் சம்பந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN 42 F 2721 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Splender Pro இருசக்கர வாகனத்தின் விபத்திற்கான காரணம் அறியும்பொருட்டு காங்கயம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தினேன். கடந்த 10.03.2025 ஆம் தேதி மோட்டார் வாகன ஆய்வறிக்கைச் சான்றுகள் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஈஸ்வரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(TN 38 BP 7539 என்ற பதிவு எண் கொண்ட Maruthi Zuzuki Swift காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், TN 42 F 2721 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Splender Pro இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

8. இவ்வழக்கில் இறந்துபோன கண்ணன் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்த காங்கேயம் அரசு மருத்துவமனை மருத்துவர் குகப்பிரியா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன கண்ணன் என்பவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்து சிகிச்சை அளித்த திருப்பூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் கௌதமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன கண்ணன் என்பவரின் பிரேதத்தினை உறுதி செய்து இறப்பு இண்டிமேசன் வழங்கி

பிரேதத்தை சவக்கிடங்கிற்கு அனுப்பிவைத்த திருப்பூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் பூவரசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கு விபத்தில் காயம்பட்டு இறந்துபோன கண்ணன் என்பவர் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட திருப்பூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் முத்துக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். **(கண்ணன் என்பவரின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.9 ஆகவும், இறப்பு இண்டிமேசன் அ.சா.ஆ.10 ஆகவும் மற்றும் இறந்துபோன கண்ணன் என்பவரின் பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

10. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல் நிலைக் காவலர் திரு. முருகேஷன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் புலன் விசாரணை முடித்து 10.03.2025 ஆம் தேதியன்று எதிரி மீது சட்டப்பிரிவு 281, 106(1) BNS ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

விபத்தின் கண்ணுற்ற சாட்சியாக சொல்லப்படம் பிரகாஷ் விபத்தில் இறந்த சக்திவேல் மகன் கண்ணன் என்பவருக்கு உறவினர் என்றால் சரிதான். கண்ணுற்ற சாட்சியாக தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கின் எதிரிக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் விபத்தில் இறந்த கண்ணன் என்பவருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் மற்றும் அவரது வாகனத்திற்கு தகுதி சான்று இல்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்த கண்ணன் என்பவர்தான் எதிரே வரும் வாகனத்தை கவனிக்காமல் வலது புறமாக ஏறிச்சென்று வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில்

சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.10 17:21:56 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்